பஸ்பாகே கோரலே பிரதேச சபை
கண்டி மாவட்டம்

---

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2018 ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 2019மார்ச் 29 திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளரின் பொழிப்பு அறிக்கை 2019 மே 31 மற்றும் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 ஜுன் 30 ஆம் திகதியும் தவிசாளரிற்கு அனுப்பப்பட்டது.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின்முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைபிரிவில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்துநிதிக்கூற்றுகளின் 2018 திசெம்பர் 31 இல் பஸ்பாகே கோரலேபிரதேச சபையின் நிதிநிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார்செயலாற்றலினையும் பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

1.3.1 கணக்கீடு குறைபாடுகள

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | ரூபா 2,079,000 ஆன பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்ட இரண்டு இடுகாடுகளில் பெறுமதியை கணக்கீடு செய்திருக்கவில்லை. | சொத்துக்களை கண்க்கீடு செய்ய வேண்டும். | 2019 நிதிக் கூற்றுக்களினூடாக சரி செய்கிறேன். |
| (ஆ) | பண்டங்கள் ஏலவிற்பனைக்கு முன் ரூபா 573,889 பெறுமதியான அலுவலக மற்றும் இயந்திர உபகணங்கள் 23 உருப்படிகள் நிதிக் கூற்றுக்களினால் அகற்றப்பட்டுள்ளன. | சரியாக கண்க்கீடு செய்ய வேண்டும். | 2019 நிதிக் கூற்றுக்களினூடாக சரி செய்கிறேன். |
| (இ) | களஞ்சியத்தினால் வழங்கப்பட்ட ரூபா 509,102 பெறுமதியான காயிதாகிகள் இருப்பு செலவாக இனங்கண்டிருக்கவில்லை. | இருப்பு விநியோகங்கள் சரியாக கண்க்கீடு செய்யப்பட வேண்டும். | 2019 நிதிக் கூற்றுக்களினூடாக சரி செய்கிறேன். |
| (ஈ) | கைத்தொழில் வைத்திருக்கை பணம் ரூபா 178,564 யினை, கைத்தொழில் கடன் பட்டோராக இனங்கண்டிருந்தது. | ஆண்டினுள் வைத்திருக்கைபணத்தை சரியாக இனங்காண வேண்டும். | 2019 நிதிக் கூற்றுக்களினூடாக சரி செய்கிறேன். |
| (உ) | மூலதன செலவினம் ரூபா 3,618,815 குறைத்து கணக்கீடு செய்திருந்தது. | மூலதன செலவினங்களை சரியாக கண்க்கீடு செய்ய வேண்டும். | 2019 நிதிக் கூற்றுக்களினூடாக சரி செய்கிறேன். |

| | | | |
|---|---|---|---|
| (ஊ) | ஆண்டு இறுதி பணம் மீதி ரூபா 2,526,818 இனால் கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது. | சரியாக கண்க்கீடு செய்ய வேண்டும். | 2019 நிதிக் கூற்றுக்களினூடாக சரி செய்கிறேன். |
| (எ) | மீளாய்வாண்டில் நீர் கட்டண வருமானம் ரூபா 100,805 யினை இரு முறை வருமானமாக இனங்காணப்பட்டிருந்தது. | வருமானம் சரியாக கண்க்கீடு செய்யப்பட வேண்டும். | 2019 நிதிக் கூற்றுக்களினூடாக சரி செய்கிறேன். |
| (ஏ) | ஆண்டினுள், செலுத்தப்பட்ட கடன் தவணை ரூபா 1,887,365 மூலதன செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | கடன் தவணை செலுத்துதல் சரியாக கண்க்கீடு செய்யப்பட வேண்டும். | செலத்த வேண்டிய கடன் மீதி கூடுதலாகவும், மிகை குறைத்தும், காட்டப்பட்டுள்ளது என ஏற்றுக் கொள்கிறேன். |

1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 02 கணக்கு விடயங்களின் நிதிக் கூற்றுக்கள் பிரகாரம் மீதி மற்றும் துணை பதிவேடுகள் பிரகார மீதிகள் இடையில் ரூபா 262,976 ஆன இணங்காமை நிலவியது. | குறித்த மீதிகளின் வித்திதயாசத்தை இணக்கஞ் செய்து கணக்குகளை சீர் செய்ய வேண்டும். | துரிதமாக தீர்த்திகொள்ள நடவடிக்கை எடுக்கிறேன். |

1.3.3 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

(அ) பெற வேண்டிய கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 05 ஆண்டுகளை விஞ்சிய கிடைக்க வேண்டிய கணக்கு மீதிகளின் கூட்டுத் தொகை ரூபா 810,845 ஆனதுடன் 01 ஆண்டிற்கும் 05 ஆண்டுகளிற்கும் இடையிலான காலத்தினுள் நிலுவை மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 20,796,710 ஆனது. | நிலுவை மீதிகளை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | நிலுவை வருமானம் அறவிடுவதற்கான வேலைத் திட்டமொன்று நடாத்தப்படுகிறத. |

(ஆ) செலுத்த வேண்டிய கணக்குகள்

| | | |
|---|---|---|
| 01 ஆண்டிற்கும் 05 ஆண்டுகளிற்கும் இடையிலான காலத்தை விஞ்சிய செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளின் கூட்டுத் தொகை ரூபா 2,487,580 ஆனது. | செலுத்த வேண்டிய மீதிகளை தீர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும். | பணம் பல நிறுவனங்களிலிருந்து மீள் நிரப்பப்பட்டதன் பின்னர் தீர்க்க நடவடிக்கை எடுக்கிறேன். |

1.3.4 கணக்காய்விற்கான எழுத்து மூல சான்றுகளின்மை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| அட்டவணைகள் கணக்காய்விற்கு சமர்பிக்கப்படாததால்,ரூபா 2,001,870 ஆன பொது வைப்பு கணக்கில் மீதியை கணக்காய்வின் போது திருப்திகரமாக ஒப்பாய்வு செய்ய முடியவில்லை. | நிதிக் கூற்றுக்களில் குறிப்பிடப்படும் மீதிகளை உறுதிப்படுத்தும் சான்றுகளை கணக்காய்விற்கு சமர்பிக்க வேண்டும். | 2019 நிதிக் கூற்றுக்களினூடாக சரி செய்கிறேன். |

1.4 இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும்முகாமை தீர்மானங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள்,பிரமாணங்கள் மற்றும் முகாமை தீர்மானங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் பின்வருமாறு.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமை தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமை | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச்சட்டம் 149 ஆம் பிரிவு | இலங்கை சுற்றுலாத் துறை சபையில் பதியப்பட்ட ஹோட்டல், உணவகம் மற்றும் தங்குமிடங்களை இனங்கண்டு அறவிட வேண்டிய அனுமதிப்பத்திர கட்டணம் அறவிடப்பட்டிருக்கவில்லை. | சுற்றுலாத் துறை சபையில் பதியப்பட்ட ஹோட்டல், உணவகம் இனங்கண்டு அனுமதிப்பத்திர கட்டணம் அறவிடப்பட வேண்டும் | சுற்றுலாத் துறை சபையுடன் கலந்துறையாடி தேவையான நடவடிக்கை எடுக்கிறேன். |
| (ஆ) 1988 இன் பிரதேச சபை (நிதி மற்றும் நிர்வாக) விதி கோவை | | | |
| (i) நிதி விதி 19 | அனைத்து அடியிதழ் சேர் புத்தகங்கள் சபையின் செயளாலரின் பொறுப்பில் இருக்க வேண்டிய போதும், அவை களஞ்சிய பொறுப்பான உத்தியோகத்தரிடமிருந்தது. | அனைத்து அடியிதழ் சேர் புத்தகங்கள் சபையின் செயளாலரின் பொறுப்பில் வைத்துக்கொள்ள வேண்டும். | இதன் பின்னர் செயளாலரின் பொறுப்பில் வைக்க நடவடிக்கை எடுக்கிறேன். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ii) | நிதி விதி 178(8)(2) | தொழில்நுட்ப பரிந்துரையின்றி மீளாய்வாண்டின் போது, 15 உருக்குகபட்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. | தொழில்நுட்ப பரிந்துரையை பெற்றுக் கொள்ள வேண்டும். | தொழில்நுட்ப அலுவலரின் சேவை நீடிப்பு காலம் 2018.12.14 திகதியுடன் முடிவடைந்ததனால் அச்சந்தர்பங்களில் எழுத்து மூல பரிந்துரையை பெற்றுக் கொள்ள முடியவில்லை. |
| (iii) | நிதி விதி 178(2)(ஊ) | சபைக்கு தேவையான கதிரைகளை கொள்வனவு செய்யும் போது, விலை மனு சமர்பிக்க போதிய காலமொன்று டென்டர்காரர்களிற்கு வழங்கப்படவில்லை. | விலை மனு சமர்பிக்க போதிய சாதாரண காலமொன்று விலை மனுதாரருக்கு வழங்கப்பட வேண்டும். | உள்ளுராட்சி தேர்தல் நடாத்துதல் 2018.02.10 திகதி போடப்பட்டிருந்ததனால் டென்டர் பத்திரம் சமர்பிக்க 2018.02.07 திகதி வரை மட்டுமே காலம் வழங்க முடியுமானது. |

2. நிதி மீளாய்வு

2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2018 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கானசபையின் மீண்டுவரும் செலவுகளை விஞ்சிய வருமானம் ரூபா 10,773,803ஆனதுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவுகளை விஞ்சிய வருமானம் ரூபா 5,341,786 ஆனது.

2.2 வருமான நிருவாகம்

2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம்,பில் இடப்பட்ட வருமானம், சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆணடு தொடர்பாகமுன்வைக்கப்பட்டமதிப்பிடப்பட்ட வருமானம், பில் இடப்பட்ட வருமானம், சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் பின்வருமாறு.

| | வருமான மூலம் | 2018 மதிப்பிடப்பட்ட வருமானம் | பில் போடப்பட்ட வருமானம் | சேர்க்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | 2017 மதிப்பிடப்பட்ட வருமானம | பில் போடப்பட்ட வருமானம | சேர்க்கப்பட்ட வருமானம | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| i | வீத வரி மற்றும் குத்தகை | 1,050,000 | 683,936 | 549,384 | 855,634 | 4,681,000 | 4,938,166 | 4,786,131 | 3,414,812 |
| ii | வாடகை | 2,303,220 | 2,150,220 | 1,780,449 | 576,737 | 4,245,000 | 2,276,529 | 2,156,125 | 276,042 |
| iii | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 480,000 | 782,376 | 695,676 | 519,000 | 855,300 | 854,857 | 749,357 | 435,100 |
| iv | ஏனைய வருமானம | 25,295,000 | 21,630,955 | 12,096,304 | 32,920,813 | 18,439,000 | 11,423,196 | 10,469,435 | 10,992,080 |
| | கூட்டுத் தொகை | 29,128,220 | 25,247,487 | 15,121,813 | 34,872,184 | 28,220,300 | 19,492,748 | 18,161,048 | 15,118,034 |

## 2.2.2 வருமானம் சேகரிப்பதன் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சகல வருமான மூலங்களிலிருந்தும் 2017 திசெம்பர் 31 திகதிக்கு நிலவிய நிலுவை ரூபா 15,118,034 ஆனதுடன், மீளாய்வாண்டில் இறுதி திகதிக்கு அப் பெறுமதி ரூபா 34,872,184 ஆனமையால்,நிலுவை வருமானத்தில் வளர்ச்சி 131 சதவீதமானது. | நிலுவை வருமான அறவிடலின் செயலாற்றலை வளர்த்துக்கொள்ள வேண்டும். | நிலுவை வருமானம் அறவிடுவதற்கு துரித வேலைத்திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளதுடன், அது நடைமுறைப்படுத்தப்படுகிறது. |

## 2.2.3 வீத வரி மற்றும் குத்தகை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | வீத வரி | | |
| (i) | 05 ஆண்டுகளுக்கு ஒரு முறை புதிய வீத வரி பெறுமதி மதிப்பீடொன்று செய்து மதிப்பீட்டு கட்டணத்தை அறவிட வேண்டிய போதும், 2009 பெறுமதி மதிப்பீடு அடிப்படையில் வீத வரி அறவிடபட்டிருந்தது. | வீத வரி அறவிடும் ஆதனங்கள் 05 வருடங்களுக்கு ஒரு முறை பெறுமதி மதிப்பீடு செய்யப்பட வேண்டும். | பெறுமதி மதிப்பீட்டு திணைக்களத்திற்கு பலதடவைகள் அறிவித்து, பதிவேடுகள் மதிப்பீட்டாலரிற்கு அனுப்பப்பட்டுள்ளது. |
| (ii) | 10 சொத்து உரிமையாளர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 97,107 ஆன வீத வரி மீதியொன்று 02 ஆண்டுகளை விஞ்சிய காலத்திலிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | வருமானத்தை நீண்ட காலம் நிலுவையாக வைத்துக் கெள்ளாமல் காலத்திற்குரியதாக அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | 02 மாதங்களினுள் இப் பணத்தை அறவிட நடவடிக்கை எடுக்கிறேன். |
| (ஆ) | நீர் கட்டணம் | | |
| | மீளாய்வாண்டு ஆரம்ப திகதிக்கு நிலுவை நீர் கட்டணம்ரூபா 2,739,481 இலிருந்து ரூபா 1,385,712 அல்லது 50 | நிலுவை வருமானம் மற்றும் ஆண்டினுள் | நிலுவை பணம் அறவிடுவதற்கு நிகழ்ச்சித் திட்டங்கள் |

| | | |
|---|---|---|
| சதவீதம் அறவிடப்பட்டிாருக்காததுடன், ஆண்டிற்காக பில்யிடப்பட்ட நீர் கட்டண வருமானமான ரூபா 4,182,966 இலிருந்து ரூபா 2,404,980 அல்லது 43 சதவீதம் அறவிடப்பட்டிருக்கவில்லை. | பில்யிடப்படல் அறவிடப்பட வேண்டும். | நடைமுறைபடுத்துவதுடன், மற்றும் வருடாந்த பில்லிடலை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கிறேன். |

(இ) முச்சக்கர வண்டி கட்டணம்

| | | |
|---|---|---|
| மீளாய்வாண்டு ஆரம்பத்தில் நிலுவை முச்சக்கர வண்டிக்கட்டண தொகையானரூபா 403,100 இலிருந்து ரூபா 380,300 தொகையொன்று அறவிடப்பட்டிருக்காததுடன், ஆண்டிற்காக பில்யிடப்பட்ட முச்சக்கர வண்டி கட்டண வருமானமானரூபா 142,200 இலிருந்து ரூபா 122,700 அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிலுவை பணம் மற்றும் வருடாந்த கட்டணத்தை அறவிட வேண்டும். | நிலுவை தொகையிலிருந்து ரூபா 216,200 ஆன தொகையொன்றை பதிவழிக்குவதற்காக ஆளுநரால் அங்கீகரிக்கப்பட்டுள்ளதுடன், எஞ்சிய பணத்தை அறவிட்டுக் கொண்டு கணக்காய்விற்கு அறிக்கையிடுகிறேன். |

2.2.4 நீதி மன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 திசெம்பர் 31 திதிக்கு பெற வேண்டிய நீதிமன்ற தண்டப்பணம் மற்றும்முத்திரைக் கட்டணம் முறையே ரூபா 1,551,749வும் ரூபா 23,664,122 ஆனது. | நிலுவை நீதிமன்ற தண்டப்பணம் மற்றும்முத்திரைக் கட்டணத்தை அறவிட வேண்டும். | நீதிமன்ற தண்டப்பணத்திலிருந்து ரூபா 1,204,045 தற்போது மீள் நிரப்பப்பட்டுள்ளதுடன், எஞ்சிய தொகையை மற்றும் முத்திரைக் கட்டணத்தை மீள் நிரப்பிக்கொள்ள நடவடிக்கை எடுக்கிறேன். |

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றுகை

பிரதேச சபை அதிகார சட்டத்தின் 03 பந்தியின் கீழ் பொது மக்கள் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொதுப் பாதைகள் தொடர்பான விடயங்களை ஒழுங்குபடுத்தலும் கட்டுப்படுத்தலும்,மக்கள் நலன், இலகுமற்றும் நலன்புரிச் சேவைகள் போன்ற சபையினால் மேற்கொள்ள வேண்டிய செயற்பாடுகளை நிறைவேற்றுவது தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் பின்வருமாறு.

(அ) துணைச் சட்டம

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | சபை அதிகார எல்லையினுள் சிறிய மின்வலு நிலையம் இருந்த போதும், துணைச் | துணைச் சட்டம் தயாரித்து வருமானம் | துணைச் சட்டத்தை அங்கீகரித்துக் கொள்ள நடவடிக்கை எடுக்கிறேன். |

| | | |
|---|---|---|
| சட்டம் தயாரித்து வருமானம் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | |
| (ii) சபைக்கு சொந்தமான கலபொட நீர் வீழ்ச்சி சுற்றுலா பிரதேசத்தைபார்வையிட வருகைதரும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலப பிரயாணிகளிடமிருந்து கட்டணம் அறவிடல் தொடர்பான துணைச்சட்டம் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | துணைச் சட்டம் தயாரித்து வருமானம் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | துணைச் சட்டம் அங்கீகரித்துக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்படுகிறது. |

(ஆ) கழிவுப் பொருள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| வெளியேற்றப்படும் கழிவு பொருட்கள், மூலப்பொருளாக பயன்படுத்தி கொம்போஸ்ட் உற்பத்தி செய்வது தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | கொம்போஸ்ட் உற்பத்தி செய்வது தொடர்பில் கவனம் செலுத்த வேண்டும். | ஒன்று சேர்க்கப்படும் குப்பைகள் நாவலபிட்டிய நகர சபையால் குப்பை உற்பத்தி செய்யும் இடத்திற்கு வெளியிடுவதுடன், அவ் விடம் சபை எல்லைனுள் அமைந்துள்ளது. |

3.2 மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) 12 பதவிகளில் 24 வெற்றிடங்கள் காணப்பட்டன. | வெற்றிடங்ளை நிரப்ப நடவடிக்கை எடுக்க வேண்டும். | தற்போது 05 பதவி வெற்றிடங்களுக்காக ஊழியர்கள் ஆட்சேர்க்கப்பட்டுள்ளதுடன், எஞ்சிய பதவிகளுக்காக ஊழியர்களை ஆட்சேர்க்க நடவடிக்கை எடுக்கிறேன். |
| (ஆ) 2017 ஆண்டில் இடமாற்றம் பெற்று சென்ற பெண் அலுவலகரிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 207,770 ஆன கடன் மீதியை ஒரு வருடம் கடந்திருந்த போதும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | இடமாற்றம் பெற்று சென்ற அலுவலகரின் கடன், இடமாற்றம் பெற்று சென்ற உடனே அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | சுகாதார அமைச்சிற்கு விபரம் அனுப்பப்பட்ட போதும், மீள் நிரப்பல் இது வரை மேற்கொள்ளப்பட்டிருக்கவில் லை. |

| | | | |
|---|---|---|---|
| (இ) | ஆண்டினுள் ஆளணி பயிற்ச்சிக்காக ஏற்பாடு செய்யப்பட்ட ரூபா 100,000 தொகையிலிருந்து ரூபா 54,520 ஆன தொகையினை பயன்படுத்தியிருக்காததுடன், 10 அலுவலகர்களுக்கு மாத்திரம் பயிற்ச்சி வழங்கப்பட்டிருந்தது. | சபையின் செயற்பாடுகளை மேற்கொள்ளும் ஒவ்வொரு உத்தியோகத்தரையும் மற்றும் ஊழியரையும் தேவையான பயிற்சி திட்டங்களுக்கு அனுப்ப வேண்டும். | 2019 ஆண்டில் பயிற்ச்சிகளுக்காக சம்பூரண நிகழ்ச்சித் திட்டமொன்று தயாரித்து நடைமுறைபடுத்தப்படுகின்றது. |

3.3 செயற்பாட்டு வினைத்திறமையின்மை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | சபையினால் மாணியற்ற வீட்டுப் பாவனையாளர்களிடமிருந்து மாதாந்த நீர் அலகொன்றிற்காக ரூபா 75 மற்றும் வியாபார அலகொன்றிற்காக ரூபா 150 ஆக 18 வருடங்களாக அறவிட்டிருந்ததனால், சரியான நீர் வருமானத்தை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | காலத்திற்கேட்ப நீர் கட்டணத்தை திருத்தி, அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | ரூபா 75 ஆன சுத்திகரிக்கப்படாத நீருக்கான கட்டணம் ரூபா 150 என 2019 மார்ச் முதல் நடைமுறையாகிறது. |
| (ஆ) | சபைக்கு சொந்தமான கிரீன் வூட் கருங்கல் கருத்திட்டத்தின் கல் உடைப்பதற்காக அனுமதிப்பத்திரம் பெற்ற தனிப்பட்ட தரப்பினரால் சபைக்கு சொந்தமான காணித்துண்டிலும் அனுமதியற்றதாக கல் உடைக்கும் வேலைகளில் ஈடுபடுவதை காணக்கூடியதாக இருந்தது. | அனுமதியற்றவிதத்தில் கல் உடைப்பது தொடர்பாக பரீட்சித்து தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டும். | காணி மறுசீரமைப்பு ஆணைக் குழுவிற்கு சொந்தமான காணி ஆகையால், அது தொடர்பாக குறித்த நிறுவனத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. |
| (இ) | கலபொட நீர் வீழ்ச்சி சுற்றுலா பிரதேசத்தை பார்வையிட வருகைதரும்சுற்றுலா பிரயாணிகள் பாதுகாப்பு, சுற்றாடல் பாதுகாப்பிற்கு நடவடிக்கை எடுக்காமல் பிரவேசப் பத்திரம் மாத்திரம் விநியோகிக்கப்படுவதை காணக்கூடியதாக இருந்தது. | பிரவேசப் பத்திர விநியோகம், பாதுகாப்பு வழங்கல் சரியாக செய்யப்பட வேண்டும். | சுற்றுலா பிரயாணிகளின் மற்றும் சுற்றாடல் பாதுகாப்பிற்கு தற்போது வேலைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டுள்ளது. |

3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

3.4.1 விளைவற்ற/குறைபயன்பாட்டுச் சொத்தக்கள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | பிரதேச சபை களஞ்சிய வளவினுள் 2015 ஆண்டு முதல் ரூபா 2,372,230 | விளைவற்று நிலவும்நீர் | 06 மாதங்களினுள் இந்த நுகர்வோர்களுக்காக |

| | | | |
|---|---|---|---|
| | யினை செலவிட்டு கொள்வனவு செய்யப்பட்டுள்ள 530 நீர் மாணிகளை மாணியற்ற 1357 நீர் பாவினையாளர்களுக்கு பொருத்தாது விளைவற்று நிலவியது. | மாணிகளை, மாணியற்ற நீர் விநியோகத்திற்காக பொருத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | மாணிகளை பொருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கிறேன். |
| (ஆ) | 2012 ஆண்டின் அனர்த முகாமைத்துவம் அமைச்சிலிருந்து நன்கொடையாக கிடைத்திருந்த ரூபா 200,000 பெறுமதியான கொன்கிரீட் கலவை இயந்திரம் பல வருடமாக வளைவற்று நிலவியது. | இயந்திரத்தை பயன்படுத்த வேண்டும். | இது பிரதேசத்திற்கு பொருத்தமில்லாததனால், அதை அமைச்சுக்கு ஒப்படைக்க அறிவூட்டப்பட்டுள்ளது. |
| (இ) | நிலையான சொத்துக்களாக காட்டப்பட்டிருந்த ரூபா 7,000,000 பெறுமதியான 04 நீர் உத்தேச திட்டங்கள் மீளாய்வாண்டினுள் செயலற்று நிலவுவதாக அவதானிக்கப்பட்டன. | நீர் உத்தேச திட்டங்களை நடைமுறைபடுத்த வேண்டும். | மகா சபைக்கு சமர்பிக்கப்பட்டு,தீர்மானமொன்று எடுக்கபடவுள்ளது. |

### 3.4.2 வாகன பயன்பாடு

#### வாகன கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபைக்கு சொந்தமான 02 வாகனங்களில் மயிலோ மாணி செயலற்று இருந்த போதும், மீண்டும் பழைய நிலைக்கு கொண்டு வர நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | மயிலோ மாணியை பழுதுபார்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர் காலத்தில், மயிலோ மாணியை பொருத்துவதற்கு வேலைத் திட்டமொன்றை தயாரிக்கிறேன். |

### 3.5 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| க்றீன்வுட்கருங்கல் கருத்திட்டத்துடன் தொடர்புடைய காணியின் பயன்பாட்டிற்காக முன்னைய ஆண்டிற்காகரூபா 1,650,000 ஆன தொகையை காணி மறுசீரமைப்பு சபைக்கு செலுத்திருந்த போதும், கருத்திட்டத்தினால் வருமானம் ஈட்டுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | கருத்திட்டத்தை உரிய முறையில் முகாமை செய்வதனூடாக உச்ச நலன்களை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவினால் காணியை ஒழுங்குமுறையில் பெற்றுத் தரவில்லை. |

3.6 பெறுகைகள்

பெறுகைகள் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்காக பெறுகைகள் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | பெறுகைகள் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டும். | 2019 ஆண்டில் பெறுகைகள் திட்டமொன்றை தயாரிக்க நடவடிக்கை எடுக்கிறேன். |

4 கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

பாதீட்டுக் கட்டுப்பாடு

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மக்கள் நலன் மற்றும் மனோநிலையை முன்னேற்றுவது போன்ற நடவடிக்கைகளுக்காக 17 செலவின விடயங்களுக்கு ஆணடினுள் ஏற்பாடு செய்த ரூபா 885,000 தொகையிலிருந்து ரூபா 856,589 யினை பயன்படுத்தியிருக்கவில்லை. | பாதீடுனூடாக ஒதுக்கப்படும் பணம் உச்ச வினைதிறனுடன் பயன்படுத்தப்பட வேண்டும். | இவ்வாறான குறைபாடுகள் எதிர்காலத்தில், ஏற்படாமவிருக்க நடவடிக்கை எடுக்கிறேன். |
| (ஆ) | சபையினால்சுகாதார வேலைத்திட்டங்களுக்காக 05 செலவின விடயங்களுக்கு ரூபா 310,000 ஏற்பாடு செய்திருந்த போதும், அதில் ரூபா 268,638 ஆன தொகையொன்றை பயன்படுத்திருக்கவில்லை. | ஏற்பாடு செய்த ஒதுக்கீடு குறித்த வேலைத்திட்டங்களுக் காக பயன்படுத்த வேண்டும். | நிறந்தர பொது சுகாதார பரிசோதகர்ரொருவர் இல்லாதனால்,எதிர்பார்த்த செயற்பாடுகளை மேற்கொள்ள முடியாமலிருந்தது. |